**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**M.C.O.P.No. 53/2026**

**Deposition of P.W. 1**

| | |
|---|---|
| **Name** | : திரு. சகாய மைக்கேல் ஆன்றோ |
| **Father's Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |
| **Dated** | : **11.08.2026** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது ராஜாவூர் குடியிருந்து வருகிறேன். நான் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்திருக்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். (**மனுதாரரின் மருத்துவமனை விடுவிப்பு சான்றிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், TN 74 BH 1080 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.2 ஆகவும், TN 74 BH 1080 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 03.10.2025 ஆம் தேதி மனுதாரர் அஞ்சு கிராமம் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு நகல் TN 74 BH 1080 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ்**

**நகல் ம.சா.ஆ.4 ஆகவும், அஞ்சு கிராம காவல் நிலைய CSR எண் 0876/2025 ன் அசல் ம.சா.ஆ.5 ஆகவும், மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிப்பட நகல் ம.சா.ஆ.6 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிப்பட நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 06.02.2026 ஆம் தேதியிட்ட 1ஆம் எதிர்மனுதாரருக்கு மனுதாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.8 ஆகவும், அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் ம.சா.ஆ.9 ஆகவும், மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிப்பட நகல் ம.சா.ஆ.10 ஆகவும், மனுதாரரின் மருத்துவ கட்டண ரசீது எண்ணிக்கை 14 அசல் ம.சா.ஆ.11 ஆகவும், 03.10.2025 ஆம் தேதியிட்ட மனுதாரருக்கு இரத்த வங்கியில் கொடுக்கப்பட்ட ரசீது அசல் ம.சா.ஆ.12 ஆகவும், மனுதாரரின் மருத்துவ கட்டண ரசீது எண்ணிக்கை 2 அசல் ம.சா.ஆ.13 ஆகவும், மனுதாரரின் மருத்துவ கட்டண ரசீது எண்ணிக்கை 8 அசல் ம.சா.ஆ.14 ஆகவும், மனுதாரர் ஓமன் நாட்டில் பணிபுரிந்ததற்கான அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிப்பட நகல் ம.சா.ஆ.15 ஆகவும், மனுதாரரின் பாஸ்போர்ட் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிப்பட நகல் ம.சா.ஆ.16 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)